## செய்தி வெளியீடு

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் 763 அங்கன்வாடி பணியாளர் காலிப்பணியிடங்களுக்கும், 241 குறுமைய அங்கன்வாடி காலிப்பணியிடங்களுக்கும் மற்றும் 921 உதவியாளர் காலிப்பணியிடஙகளுக்கும் நேர்முக தேர்வின் மூலம் நிரப்ப விளம்பரம் வெளியிடப்பட்டு 09.08.2017 முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பெற இறுதி நாள் 24.08.2017 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து 31.08.2017 வரை விண்ணப்பங்கள் பெற இறுதி நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்காலிப்பணியிடங்கள் குறித்த விவரம், காலிப்பணியிடங்களுக்கான இனசுழற்சி விவரம், வயது வரம்பு, கல்வி தகுதி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அந்தந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலும், மாவட்ட இணையதளமான www.tiruvannamalai.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பங்களை குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலிருந்தோ, மாவட்ட இணையதளமான www.tiruvannamalai.nic.in என்ற இணையதளத்திலுருந்தோ பதிவிறக்கம் செய்து சம்மந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களில் அளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பம் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை இரசீது வழங்கப்படுகிறது.

24/8

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.